Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 12ஆம் நாள் ஷவ்வால் 7. (25-3-61) சனிக்கிழமை இதழ் 37

Jegajothi
TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெக ஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

பாரதூரமான நடவடிக்கை எடுக்க நேரிட்டால்

# 'தமிழரசுக்கட்சியே பொறுப்பாகும்'

## பிரதமர் சிறிமா அறிக்கை

(நமது கொழும்பு நிருபர்)

கொழும்பு, வெள்ளி

**"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் பாரதூரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டி நேரிட்டால் தமிழரசுக்கட்சியும் சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பவர்களுமே பொறுப்பாவார்கள்."**

**இவ்வாறு பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா இன்று வானொலி மூலம் விடுக்கவிருக்கும் ஒரு செய்தியில் குறிப்பிடுவாரென்று தெரிகிறது.**

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கும் சத்தியாக்கிரக இயக்கமே பொறுப்பாகும் என்றும் பிரதமர் கருதுகிறார்.**

பிரதமர் சிறிமா இன்று சனிக்கிழமை வானொலியில் ஒரு செய்தி விடுக்கவேண்டுமென்று நேற்றுக்கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பிரதமரின் வானொலிப் பேச்சு எப்படியிருக்கவேண்டுமென்பது பற்றியும் மந்திரிசபை நீண்டநேரம் அலசி ஆராய்ந்தது. பிரதமர் சிறிமா இன்று வானொலியில் விடுக்கவிருக்கும் செய்தியின் சாரம் பின்வருமாறு இருக்குமென்று தெரிகிறது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சம்பந்தமாக அரசாங்கம் பாரதூரமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டி யேற்பட்டால் அதற்குத் தமிழரசுக்கட்சியும், அதன் ஆதரவாளர்களும்— பொதுவாக சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பவர்களெல்லோருமே பொறுப்பாளிகளாவார்களென்பதை பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டில் கலந்துகொள்ளச் செல்வதற்குமுன் நான் விடுத்த வானொலிச் செய்தியில் நாட்டில் சகஜநிலையேற்படுத்த உதவிபுரியும்படி கேட்டிருந்தேன். நான் வேண்டுகோள் விடுத்தும்கூட அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் இன்று நாட்டில் சகஜநிலைமை ஏற்பட்டிருக்கும். இன்று நிலவும் இப் பிரச்சினையைப் பேச்சு வார்த்தைகள் நடத்தி சுமுகமான ஒரு முடிவு காண்பதற்கு இலகுவாகவும் இருக்கும்.

### பார்லிமெண்டில் தீர்த்திருக்கலாம்

ஒரு ஜனநாயக நாட்டில் மனச்சஞ்சலமடைந்த சிறுபான்மைச் சமூகமொன்று இருக்குமானால் அந்தச் சமுதாயம் தனது கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு பார்லிமெண்டைத் தாராளமாக உபயோகித்துக்கொள்ளலாம்.

சிறுபான்மைச் சமூகத்தின் கஷ்டங்களை அதன் பிரதிநிதிகள் பார்லிமெண்டில் விளக்கிக் கூறியிருக்கவேண்டும். ஆனல், தற்போதைய சூழ்நிலையில், சமஷ்டி வாதிகள் மூன்று மாத விடுமுறை பெற்றது வியப்புக்குரியது.

### அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

தமிழருடைய மொழி உரிமையையும் இதர உரிமைகளையும் அரசாங்கம் பறிக்கிறதென்ற பொய்ப் பிரசா

(6ம் பக்கம் பார்க்க)

---

யாழ்ப்பாணத்தில்

## பங்கீட்டு அரிசி விற்க வர்த்தகர் மறுப்பு

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க இலாகாக்களில் வேலைசெய்யும் அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இலாகாத் தலைவர்கள்மூலம் பங்கீட்டரிசி விநியோகிக்கும் முயற்சி பல இடங்களில் பயனளிக்கவில்லையென அறியப்படுகிறது.**

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஓட்டுமடம் 'டிப்போ' ஆனைப்பந்தியடி 'டிப்போ' ஆகியவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பங்கீட்டரிசி வழங்க முயற்சிசெய்யப்பட்டபோது, பொதுமக்கள் சிலர் அங்குசென்று சத்தியாக்கிரகம்செய்து பங்கீட்டரிசி வழங்குவதைத் தடைசெய்தனர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தைச்சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்குவதற்காக இரண்டு மூடை அரிசியை இராணுவத்தினர் நேற்று கொண்டுபோய் இறக்கினர். இன்று அங்கு பங்கீட்டரிசி விநியோகிக்கப்படுமாம். மேலதிகாரிகள்மூலம் பங்கீட்டரிசி வழங்குவதை ஊழியர்கள் பலர் மறுத்துளளதாகத் தெரிகிறது.

சுன்னுகம் புகையிரத நிலயத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு விநியோகிப்பதற்காக பங்கீட்டரிசி ஏற்றிவந்த மோட்டார் வாகனத்தின்முன் சிலர் சத்தியாக்கிரகம் செய்தனர்.

"கூப்பன் அரிசி மூலம் மற்றொரு சதியா?", "பிரித்தாளும் தந்திரத்துக்குப் பலியாகாதீர்" என்ற தலைப்புடன்கூடிய துண்டுப்பிரசுரங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் காணப்பட்டன.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நேற்று உத்தியோகத்தர்களுக்குப் பங்கீட்டரிசி வழங்கப்பட்டது. ஒன்பதுபேர் மட்டும் பங்கீட்டரிசியைப் பெற்றதாயும் இதர உத்தியோகத்தர்கள் பங்கீட்டரிசியை ஏற்க மறுத்துவிட்டனரெனவும் அறியப்படுகிறது.

## சில சிப்பந்திளும் அரிசி வாங்கவில்லையாம்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கக் காரியாலயத் தலைவர்கள்மூலம் அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பங்கீட்டரிசி வழங்கும் திட்டத்தை இரண்டு இலாகாக்களைச் சேர்ந்த ஊழியர்களைத் தவிர இதர ஊழியர்கள் நிராகரித்துவிட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் இலாகாவினரும் பிஸ்கால் இலாகாவினரும் மட்டுமே தங்கள் தலைமை அதிகாரிகளின் மூலம் பங்கீட்டரிசி பெற்றுள்ளனர்.

இலங்கை அரசினர் ஆஸ்பத்திரி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த பயிற்றப்படாத சேவையாளரும் பங்கீட்டரிசி பெற்றுக்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கக் காரியாலயத் தலைவர்கள்மூலம் அரசாங்க ஊழியர்களுக்குப் பங்கீட்டரி வழங்கும் ஏற்பாட்டை பெரும்பாலான காரியாலயங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரில் வைத்திய அதிபரின் மூலமாக விநியோகிக்கப்படவிருக்கும் பங்கீட்டரிசியை ஏற்றுக் கொள்வதில்லையென்று யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் சேவைசெய்யும் பயிற்றப்பட்ட ஆஸ்பத்திரித் தொழிலாளர் தீர்மானித்துள்ளனர்.

தங்கள் தலைமை அதிகாரியின்மூலம் விநியோகிக்கப்படவிருக்கும் பங்கீட்டரிசியை ஏற்பதில்லையென்று முடிவுசெய்துள்ள பெரும்பாலான அரசாங்க உத்தியோகத்தர்களும்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## விஸாக் கட்டண உயர்வு

புதுடில்லி, மார்ச் 24

"இலங்கையில் விஸாவிலுள்ள இந்தியர்களின் விஸாக் கட்டணத்தை இலங்கை அரசாங்கம் உயர்த்தியிருப்பதால், இந்திய அரசாங்கம் இந்தியாவில் விஸாவிலுள்ள இலங்கையரின் விஸாக் கட்டணத்தை உயர்த்தாது" என்று பாரதப் பிரதமர் நேரு இன்று லோக் சபையில் தெரிவித்தார்.

## நேருவுக்கு கெனடி கடிதம்

புதுடில்லி, மார்ச் 24

லாவோஸ் பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாண முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு அமெரிக்க ஜனதிபதி திரு. கெனடி பாரதப் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தக்கடிதத்தை ஜனதிபதி கெனடியின் விசேஷ தூதர் திரு. ஹரிமன் பிரதமர் நேருவிடம் கொடுத்தார்.

திரு. ஹரிமனும் திரு. நேருவும் இரண்டாவது தடவையாக இன்று சந்தித்துப் பேசினர்.

---

## மன்னாரில் மறியல் இயக்கம் தீவிரமடைகிறது

### இரு அமைச்சுகள் அறிக்கை

கொழும்பு, சனி

"கூட்டுறவுச் சங்கத்தினாரா கூட்டுறவுச் சங்க சமாஜத்தினரோ, சத்திரவாதம் பெற்ற வியாபாரிகளோ பங்கீட்டரிசிக்கான அனுமதிச் சீட்டுப் பெற்றுக்கொள்ள அரசாங்க அதிபரின் இல்லத்துக்கு இன்று எவரும் வரவில்லை" என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சும் உள்நாட்டு அமைச்சும் இன்று கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளன. வடக்கு கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் சத்தியாக்கிரக நிலை

(6-ம் பக்கம் பார்க்க)

---

## சத்தியாக்கிரக நிலைமைபற்றி

### பிரதமர் ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

**தமிழ்ப்பேசும் பகுதிகளில் நடைபெறும் சத்தியாக்கிரக இயக்கம் காரணமாக அங்கு தோன்றியுள்ள நிலைமை பற்றிய முழு விபரங்களையும் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இன்று தமது மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமை பற்றி முழு விபரமடங்கிய அறிக்கையொன்றை உள்நாட்டு மந்திரி மைத்திரிபால சேனநாயக்கா இன்றைய மகாநாட்டில் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் சார்பில் வடக்கு,

(6 பக்கம் பார்க்க)

## மாக்மிலன் 19 நாள் சுற்றுப்பிரயாணம்

லண்டன், மார்ச் 24

பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் மேற்கிந்திய தீவுகள், அமெரிக்கா, கனடா ஆகிய இடங்களுக்கு 19 நாள் சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள இன்று லண்டனிலிருந்து புறப்பட்டார்.

அமெரிக்க ஜனதிபதி கெனடியை மாக்மிலன் சந்திப்பது இது முதல் தடவையாகும்

## மணிவாக்கு

உனக்கே உண்மையாயிரு; அப்போது நீ அனைத்தையும் அடைவாய். நேர்மையாயிருத்தல் அரிதேயாகும். ஆனல் மக்கள் அதனை மிக எளிதாகக் கருதுகின்றனர்.

—துரியா நந்தர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 12 உ (25-3-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சம்பளக் கமிஷன் அறிக்கை

பள்ளிக்கூட ஆசிரியர்கள் உட்பட அரசாங்க சிப்பந்திகளின் சம்பளங்களை உயர்த்த வேண்டுமென்று, சம்பளக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் பொதுவாக சம்பள உயர்வு பெறுபவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்.

கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் மூலம் அரசாங்க சிப்பந்திகளுக்கு வருஷமொன்றுக்கு நான்கு முதல் நாலரைக்கோடி ருபாய்வரை சம்பள உயர்வு கிடைப்பதாக இருக்கும். அரசாங்க சேவையிலுள்ள ஒரு சாதாரண சரீர உழைப்புத் தொழிலாளிக்கும் மாதம் குறைந்தது ரூ. 135 சம்பளம் கிடைக்கவேண்டுமென்றும், டைபிஸ்டுகள், குமாஸ்தாக்கள் சம்பளமெல்லாம் உயர்த்த வேண்டுமென்றும், இந்தச் சம்பள உயர்வு 1960-ம் வருடம் அக்டோபர் முதலே அமுலுக்கு வரவேண்டுமென்றும் கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. மாதம் ரூ. 150க்குக் குறைந்த சம்பளக்காரரே இருக்கப்படாதென்றும் ஒரு கமிஷனர் ஆட்சேபக் குறிப்பு சமர்ப்பித்துள்ளார். அரசாங்கத்திலுள்ள குறைந்த சம்பளக்காரருக்கெல்லாம் இச் சிபார்சுகள் பெரிய வரப்பிரசாதமாகும்.

இதுவரை சிப்பந்திகளுக்கெல்லாம் சம்பளமும் பஞ்சப்படியும் அளிக்கப்பட்டு வந்தது. வாழ்க்கைச் செலவுகள் இனி குறைவதற்கான வழியில்லை என்று கண்டு பஞ்சப்படியையும் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து விடுமாறு கமிஷன் சிபார்சு செய்துள்ளது சரியானதே. சம்பள உயர்வுகள் பெற்ற பின்பாவது, அரசாங்க சிப்பந்திகள் அதிக திருப்தியுடன் தங்கள் கடமைகளைப் பொதுமக்களுக்கு அதிக ஊக்கத்துடன் செய்யவேண்டுமென்றும், லஞ்ச ஊழல்கள் குறையுமென்றும் எதிர்பார்ப்பது மிகையல்ல.

வாழ்க்கைச் செலவுகளும் சம்பளமும் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றை ஒன்று விரட்டுவது அனுபவம் கண்ட உண்மை. சம்பளம் கூடியதும் வாழ்க்கைச் செலவுகள் இனி உயரக்கூடும். விலைவாசிகள் உயர்வதாயின், இப்போது கிடைக்கும் சம்பள உயர்வால் விசேஷ நன்மை இருக்க முடியாது. ஆகவே இதே சமயத்தில் விலைவாசிகள் உயராதபடியும் கூடுமானவரை குறைக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் அளிக்கும் சம்பள உயர்வுகளை, மற்ற வர்த்தக ஸ்தாபனங்களும் பின்பற்ற வேண்டியேற்படும். வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபன சிப்பந்திகள் இனி சும்மா இருக்கமாட்டார்கள். தோட்டத் தொழிலாளரும் கூட தங்களுக்கு மற்றவர்களைப்போல் ஊதியம் அளிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இப்புதிய பளுவை ஏற்க வர்த்தக, கைத்தொழில் ஸ்தாபனங்கள் மறுக்கமுடியாது.

மாதச் சம்பளம் வாங்காதவர்கள் பொதுமக்களில் மிக அதிகம். அவர்களுக்குக் கஷ்டம் அதிகரிக்கும்படியான எதுவும் அரசாங்கம் செய்யப்படாது. இதற்கு மாறாக, அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைத்து, வாழ்க்கைச் செலவுகள் உயராமல் தடுக்க அரசாங்கம், பொது மக்களின் நன்மையைக் கருதி அதிக கண்டிப்பான நடவடிக்கைகளை இனி எடுக்க வேண்டும். அப்படி எடுப்பது அரசாங்க சிப்பந்திகளுக்கும் நன்மையாகும்.

# நிலைமை மோசமாகாதபடி தடுக்க இருதரப்பின் கவலை

## புதனன்று இடைத் தேர்தல்கள்: பின்னரே சமரச முயற்சி

— நமது அரசியல் நிருபர் —

லண்டன் சென்றிருந்த பிரதமர் சிறிமா. நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கைக்குத் திரும்பிவிட்டார். இரண்டு வாரகாலமாக அவர் இங்கு இல்லை. அவர் இல்லாத சமயத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சத்தியாக்கிரக நிலை எப்படி என்பது பற்றி, வந்ததும் தமது மந்திரிகளுடன் கவலையுடன் ஆலோசனை நடத்தினர்.

சத்தியாக்கிரக இயக்கம் மன்னர், வவனியா முதலிய இடங்களுக்கும் பரவியுள்ளதென்றாலும், அது சட்டமறுப்பு இயக்கமாக மாறவில்லை. இவ்விஷயமாக தமிழரசுக் கட்சியினர் பல திட்டங்கள் போட்டிருந்ததாக கூறப்பட்டது. ரயில், பஸ்களில் டிக்கெட் இல்லாமல் பிரயாணம், ஆனை இறவில் உப்பு எடுப்பது, போட்டி தபால்சேவை என்று ஏதேதோ திட்டம் போட்டிருந்ததாம். ஆனல் பிரதமர் சிறிமா திரும்பிவரும் வரை, நிலைமையை மோசமாக்கிவிடக் கூடாதென்றும், பிரதமருக்கு ஒரு சந்தர்ப்பமளிக்கவும் அத்திட்டத்தை தமிழரசுக் கட்சியினர் ஒத்திவைத்ததாகவும் தெரிகிறது.

இதேபோல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில், இராணுவம், கடற்படை சிப்பாய்கள், தெருவில் வராமல் முகாம்களிலேயே இருந்து வருகின்றனர். அரசாங்கமும், நிலைமையை மோசமாக்கிவிடக்கூடிய எதையும் செய்யவில்லை. இரு தரப்பினரும் அதிக பொறுமையுடன் இருந்திருக்கிறார்கள். ஒரு கண்யமான சமரசம் சீக்கிரத்தில் ஏற்படவேண்டுமென்ற விருப்பம், அரசாங்கக்கட்சியில் மட்டுமன்றி, சிங்களப் பொது மக்களிடையேயும் வளர்ந்து வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

வெலிமடை மெம்பர் கே. எம். பி. ராஜரத்னவின் கூட்டங்களுக்கு ஆட்கள் சேருவதில்லையாம். மீண்டும் 1958-ம் வருட கலகம் போல் ஏற்படக்கூடாதென்று, சிங்களப்பொது மக்களும் உணர்வதாயும், சென்ற கலகத்தில், சில பிரசாரகர்களின் பேச்சைக் கேட்டவர்கள், சிறை முதலிய தண்டனை அனுபவிப்பதால், மீண்டும் கலகம் செய்வதுபற்றி எச்சரிக்கையாக இருப்பதாயும் சொல்லப்படுகிறது.

**இதே சமயம் மந்திரிகளும், சத்தியாக்கிரக விஷயமாக ஒரு சமரசம் ஏற்படுத்த ஆவல் கொண்டிருப்பதாயும் தினசரி கூடி ஆலோசனை செய்யத் தீர்மானித்துள்ளதாயும்**, யாழ்ப்பாணம், திருக்கோணமலை மட்டக்களப்பு அரசாங்க அதிபர்கள் கொழும்புசென்று நிலைமையைப் பிரதமருக்கு விளக்கவும் ஏற்பாடாகியுள்ளது. ஆனல் சத்தியாக்கிரகம் நீடிக்கும் வரை சமரசப் பேச்சில்லை என்று அரசாங்கமும், உரிமை கிடைக்கிறவரை சத்தியாக்கிரகத்தை நிறுத்தமுடியாதென்று தமிழரசுத் தலைவர்களும் இருந்து வருவதாயின், சமரசம் ஏற்படுவதென்பது முடியாத காரியம்.

∴ ∴ ∴

### இடைத் தேர்தல்கள்

இது எப்படியாயினும், வருகிற புதன்கிழமை 29-ம் திகதி மூன்று தொகுதிகளில் பார்லிமெண்ட் சபைக்கு இடைத் தேர்தல்கள் நடக்கின்றன. ரத்கமை, குருநாகல், மாத்தளை இம்மூன்று தொகுதிகளிலும் சுதந்தரக் கட்சியினர் அங்கம் வகித்தனர். லஞ்சக்குற்றத்துக்காக அவர்கள் தங்கள் பதவிகளை ராஜினமாச் செய்தனர். இம் மூன்று தொகுதிகளிலும் சுதந்தரக் கட்சிக்கும் யூ. என். பி.க்கும் பலத்த போட்டி. ரத்கமையில், கம்யூனிஸ்ட் அபேட்சகரும் போட்டியிடுகிருர். சமசமாஜக் கட்சி சுதந்தரக் கட்சி அபேட்சகர்களைப் பலமாக ஆதரித்து வருகிறது. இம்மூன்று ஸ்தானங்களையும் அரசாங்கம் இழக்காமல் இருப்பின், பின்னர் அதிக தைரியமாக, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அக்கட்சி முன்வரக் கூடும்.

பிரதமர் சிறிமா, மாஸ்கோவுக்கும் செல்லாமல், அவசரமாக இலங்கை திரும்பியதற்குக்காரணம் இந்த இடைத் தேர்தல்களே. அவர் அவசரமாக இம் மூன்று தொகுதிகளுக்கும் சென்று தேர்தல் கூட்டங்களில் பேச ஏற்பாடாகியுள்ளது. சென்ற பொதுத் தேர்தலிலும் திருமதி பண்டாரநாயக்காவின் செல்வாக்கினல் தான், பல சுதந்தரக்கட்சி மெம்பர்கள் வெற்றிபெற முடிந்தது. ஆகவே சிறிமா அத்தொகுதிகளுக்கு விரைகின்ருர்.

இந்நிலையில், இடைத் தேர்தல் முடிவதற்குள்ளாக, தமிழர் பிரச்சினைபற்றி அரசாங்கம் எதுவும் செய்யுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழருக்கு ஏதாவது சலுகை காட்டினல், நாட்டை தமிழருக்கு விற்றுவிட்டதாக, போட்டிக் கட்சிகள் கூச்சலிடக்கூடும். ஆகவே இம்மாதம் 29-ந் திகதி புதன் கிழமைக்குப் பிற்பாடே, சத்தியாக்கிரக விஷயமாக அரசாங்கம் ஏதும் திட்டமான காரியம் செய்ய முடியுமென்று அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் அடிபடுகின்றன.

∴ ∴ ∴

### ஆர். ஜி.

அரசாங்கக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆர். ஜி. சேனநாயகா மீண்டும் யூ. என். பி. யில் சேர்ந்து விடலாமென்று வதந்திகள் கூறுகின்றன. பெரிய சேனநாயக்காவின் ஞாபகதினக் கூட்டத்தில், யூ. என். பி. தலைமை ஸ்தானமான 'ஸ்ரீகோதா'வுக்கு ஆர். ஜி. சென்று, கூட்டத்தில் பேசினர். அவருக்கு 'பச்சை' மாலை பலத்த கரகோஷத்தினிடையே போடப்பட்டது. அவர் உடனே யூ. என். பி. யில் பூரணமாகச் சேராவிடினும், அதன் ஒத்துழைப்புடன் தாம் பிரதமராக முயன்றுவருவது பகிரங்க ரகசியம்.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்தில் சென்ற இரண்டு கிழமையாக கூப்பன் அரிசி கிடைக்கவில்லை. எப்படி காலட்சேபம் நடக்கிறது? என்று ஒரு நண்பரைக் கேட்டேன்.

"சங்கக்கடையில் ஒருகொத்து அரிசி 70 சதம் வீதம் கொடுக்கிருர்கள். நெல் கிடைக்கிறது. ஆனல் சப்பை அதிகம். காயப்போட்டு குத்தவேண்டும். நஷ்டம். அதனல் அரிசியாகவே வாங்கினேன். கடையிலேயும் அரிசி கிடைக்கிறது. ஈரஅரிசி கொத்து ஒரு ரூபாய் பத்து சதம். நல்ல அரிசி ஒருரூபாய் 20 சதம்.

"அரிசிச் சோற்றைக் குறைத்துக்கொண்டு வேறு உணவுகளைச் சாப்பிடுகிருேம். மகன் தலாவையிலிருந்து கத்தரிக்காய் அனுப்பினன். அங்கு ராத்தல் 20 சதம் தானும். பக்கத்து வீடுகளுக்கும் கொடுத்து நாங்களும் சாப்பிட்டோம்" என்று சாப்பாட்டைப்பற்றிக் கவலைப்படாதவர்போல் பேசினர்.

∴ ∴ ∴

யுத்தகாலத்திலே வாரத்துக்கு அரைக்கொத்து அரிசிதான் ரேஷன் கிடைத்தது. ஞாபகமிருக்கிறதா? வாரம் இரண்டுவேளை அரிசிச்சாப்பாடு கிடைத்தால் அதிகம். மற்ற நாளெல்லாம் வெள்ளை மாவினல் செய்த "ராட்டி" என்ற "விராட்டி" தான்! உணவு.

தினம் இரண்டு வேளை அசல் நெல்லூர்ச்சம்பா அரிசிச் சாதம் சாப்பிட்டுவந்தஎனக்கு முதல் இரண்டொரு நாட்கள் மிகவும் கஷ்டமாக இருந்தது. பின்னர் அந்த 'விராட்டி' உணவும் பழகிவிட்டது! இப்போது நாக்கு நான் சொன்னபடிகேட்கிறது. அது சொல்கிறபடி நான் கேட்டகாலம் மலை ஏறிவிட்டது.

யுத்தம் காரணமாக நாக்கை நம்மில் பலரும் வெல்ல வேண்டிய வாய்ப்பு கிடைத்தது. இப்போது சத்தியாக்கிரக போராட்டம் காரணமாக கூப்பன் அரிசி இல்லாமல் இரண்டு வாரங்கள் எப்படியோ ஓட்டிவிட்டோம்.

அடுத்த வாரத்தில் எப்படியும் கூப்பன் அரிசி கிடைத்துவிடலாமென்றும், அதே நண்பர் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

உணவு மந்திரி எப்படியும் கூப்பன் அரிசியை நிறுத்தப்படாதென்று உறுதியாக இருப்பதாயும், ஒரு பெரிய அதிகாரி மட்டும் வீண் கௌரவம் பார்த்துப் பிடிவாதம் காட்டுவதாயும், பிரதமர் சிறிமா வந்துவிட்டதால், கூப்பன் அரிசி தடையில்லாமல் இனிக் கிடைக்கலாமென்றும் அவர்சொன்னர். நண்பரின் நம்பிக்கைநிறைவேற வேண்டும்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணத்திலிருந்து வெசபாரத்னம் என்பவர் எழுதுவதாவது:-

சென்ற பிப்ரவரி மாதம் 23ந் திகதிநான் கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரிக்கு "ரேடியோ இஞ்சினிரிங்" பாடப்பகுதி இருக்கிறதா? என்று கடிதம் எழுதினேன். மார்ச்சு மாதம் 20-ந் திகதி தனிச்சிங்களத்தில் ஒரு புஸ்தகம் அனுப்பியிருந்தார்கள். அதைத் திருப்பி அனுப்பி, எனக்கு சிங்களம் தெரியாதென்றும் தமிழ் அல்லது ஆங்கில அச்சுப்பிரதி அனுப்பிவைக்குமாறும் எழுதினேன். சிங்களத்தைத் தவிர வேறு அச்சுப் பிரதி இல்லை என்று உடன் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் இருந்து பதில் வந்திருக்கிறது இதற்கு என்ன செய்யலாம்" என்று கேட்கின்ருர்.

பிரதமர் சிறிமாவுக்கு இதை அப்படியே அர்ப்பணம் செய்வதைத் தவிர வேறு ஒரு யோசனையும் எனக்குத் தெரியவில்லை.

∴ ∴ ∴

(6-ம் பக்கம் பார்க்க)

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

தேர்தல் காலங்களில் வீதிகளில் வருவோர் போவோர் மிகக் கவனமாக இருக்க வேண்டும். சுவர்களில் எல்லாம் பெரிய சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள் சில வேளைகளில் பக்கத்தில் நிற்பவர்களின் முதுகுகளிலும் ஒட்டிவிடுவார்கள். சிலமாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாணப் பட்டினத்திலுள்ள சுவர்களில் இன்றும் தான் அபேட்சகர்களின் பெயர்கள் படங்களுடன் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன.

### சுவர் விளம்பரம்

பார்லிமெண்ட் தேர்தல்களிற் சுவரொட்டிகளை உபயோகிப்பது இப்போது தடை செய்யப்பட்டிருப்பதால் எத்தனையோ சுவர்கள் 'தப்பினேம் தப்பினேம்' என்று பேசாமல் நிற்கின்றன. சுவர்களில் பெரிய விளம்பரங்களையும் சுலோகங்களையும் ஒட்டுவோர் நகரத்தின் அழகையே கெடுக்கின்றனர்.

வாக்காளரின் கவனத்தைக் கவருவதற்குக் கவர்ச்சிகரமான விளம்பரங்களும் சுலோகங்களும் உதவி செய்வது உண்மைதான். அதற்காகப் பிறருடைய மதிற்சுவர்களையும் நகரத்திலுள்ள கட்டிடங்களின் அழகையும் பாழாக்குவது சமூக நல சேவையாகாது.

### அலங்கோலம்

பம்பாய் நகரில் மாநகர சபைத் தேர்தல் சமீபத்தில் நடைபெறவிருக்கின்றது. இத் தேர்தல் காரணமாகப் பம்பாய் பட்டினத்துச் சுவர்கள் அலங்கோல நிலையிற் காட்சியளிப்பதாக பம்பாயிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று கண்டித்திருக்கின்றது. காங்கிரஸ் காரர்கள் இப்பத்திரிகையின் கண்டனத்தைத் தட்டிக்கழிக்கவில்லை. பத்திரிகையின் அறிவுரைக்குச் செவிசாய்த்து வருகின்றனராம். சமூக நலவிருத்தியில் அக்கறை கொண்டவர்கள் இம்மாதிரியான அலங்கோல வேலைகளிற் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள். சுவர்களைப் பேசச்செய்து வாக்குகளைப் பெறும் இத்தந்திரம் எப்போதும் பலன் அளிக்க மாட்டாது. "சுவர்களைப் பழுதாக்கும் அபேட்சகர்களை ஆதரிப்பதில்லை" என்ற எண்ணம் வாக்காளரின் சிந்தனையில் உதிக்குமானல் அப்புறம் அபேட்சகர்கள் உருப்பட்டாற் போலத்தான்!

### சினிமா விளம்பரம்

யாழ்ப்பாணப் பட்டினத்தில் எந்தத் திசையை நோக்கினலும் அங்குள்ள தெருவோரச் சுவர்களெல்லாம் சினிமாப் படங்களின் வர்ண விளம்பரங்களுடன் பளிச்சிடுவதைக் காணலாம். 'மன்னாதி மன்னன்' தொடக்கம் 'கவலையில்லாத மனிதன்' வரை சமூகத்திலுள்ள பல்வேறு வகுப்பினருக்கும் தஞ்சமளித்து, வெயிலென்றும் பாராது மழையென்றும் பாராது அவர்களுக்குக் கைகொடுத்து உதவுவதில் இந்தச் சுவர்களுக்கு மனிதவர்க்கமே இணையாக மாட்டாது.

எனினும், நகரத்தின் அழகை இந்த விளம்பரச் சுவர்கள் பாழாக்குகின்றன என்பதை நகர மேயர் உட்பட அங்கத்தினர் எவரும் ஆட்சேபிக்கவே மாட்டார்கள். இந்த அழகில் சுவர்களில் விளம்பரங்கள் ஒட்டுவதை யாழ்ப்பாண மாநகரசபை தடைசெய்யுமா

(6-ம் பக்கம் பார்க்க)

# சம்பளம் கிடையாததால் கனிஷ்ட சேவையாளர் கஷ்டம்

## நடவடிக்கை எடுக்கும்படி தாய்ச் சங்கத்துக்குத் தந்தி

யாழ்ப்பாணம், சனி

கச்சேரியிலும், ஏனைய அரசாங்க அலுவலகங்களிலும் சத்தியாக்கிரகம் நடப்பதால் உள்ளே செல்லமுடியாமலிருக்கிறதென்றும், இதன் காரணமாக பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சம்பளம் கிடைக்கவில்லையென்றும், அரசாங்க கனிஷ்ட சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை கொழும்பிலுள்ள தனது தாய்ச்சங்கத்துக்கு அறிவித்திருப்பதுடன், பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான சம்பளம் தமக்கு கிடைப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படியும் கேட்டிருக்கிறது.

அரசாங்க கனிஷ்ட சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையின் விசேஷகூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் இக் கோரிக்கையை தாய்ச்சங்கத்துக்கு அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டது. தீர்மானத்தின்படி உடனடியாக ஒரு தந்திச் செய்தியும் அனுப்பி வைக்கப்பட்டது.

சத்தியாக்கிரக இயக்கம் காரணமாக அரிசிப் பங்கீடு தடைபட்டிருப்பதை அரசாங்க சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை தாய்ச் சங்கத்துக்கு சுட்டிக்காட்டி இருப்பதுடன் தங்கள் அங்கத்தவர்களுக்கு அரிசிப்பங்கீடு கிடைப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக செய்யும்படியும் கேட்டிருக்கிறது.

### 'மாணவருக்கு கஷ்டம் விளைவிக்கவேண்டாம்'

### கல்வி அதிகாரிகளுக்கு உடுப்பிட்டி எம். பி. தந்தி

உடுவில்; மார்ச் 22

தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தெரிவுப் பரீட்சை இதுவரை எதுவிதம் நடாத்தி வரப்பட்டதோ அவ்விதமே நடாத்தும்படியும், மாணவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்க வேண்டாமென்றும் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கல்வி மேலதிகாரிகளுக்கு அனுப்பிய தந்தியொன்றில் கேட்டிருக்கிறார். தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தெரிவுக்குரிய நேர்முகப் பரீட்சை கொழும்பில் இம்மாதம் 27-ம் 28-ம் திகதிகளில் நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ரஷ்யாவில் செய்தித் தணிக்கை ரத்து

மொஸ்கோ, மார்ச் 24

ரஷ்யாவிலிருந்து வெளிநாட்டு நிருபர்கள் செய்திகள் அனுப்புவதை தணிக்கை செய்யும் கொள்கையை ரஷ்யா கைவிட்டுள்ளது. வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் செய்திகள் இனிமேல் தணிக்கை செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### முள்ளியவளையில் காணிக் கச்சேரி

முள்ளியவளை, புதன்

இங்குள்ள 135-ம் ஏக்கர் நிலத்தைக் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் இப்பகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கு முகமாக ஒரு காணிக் கச்சேரி அடுத்தமாதம் 5-ம் திகதி முள்ளியவளையில் நடைபெறவிருக்கிறது.

### சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

மூதூர் முதலாவது எம். பி. திரு. ஏகாம்பரத்தின் மறைவு குறித்து வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் ஒரு அனுதாபக் கூட்டத்தை நேற்று நடத்தியது.

கூட்டத்தில் தலைவர் க. இராசையா உட்படப் பலர் திரு. ஏகாம்பரத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

இரண்டு நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

### சுகாதாரப் பத்திரம் பெறும் ஆசிரியர்

பருத்தித்துறை, வியாழன்

ஆசிரியஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சையில்சித்தியடைந்த ஆசிரியர்கட்கு தராதரப்பத்திரமும் சன்மார்க்க சடடக்கோவையும் அளிக்கும் வைபவம் ஏப்ரல் மாதம் நாலாம் திகதி கொழும்பு றோயற் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருப்பதாகஅப்பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கட்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'யுத்தம் நடப்பதை அமெரிக்கா விரும்பவில்லை'

### லாவோஸ் நிலைமை குறித்து ஜனாதிபதி கெனடி

வாஷிங்டன், மார்ச் 22

நேற்று வாஷிங்டனில் நிருபர்கள் மகாநாடொன்றில் அதிபர் கெனடி பேசியபோது, லாவோஸின் கொந்தளிப்பான நிலைமை பற்றி குறிப்பிட்டார்.

"யுத்தத்தை நாங்கள் விரும்பவில்லை. எதையும்பேசித் தீர்த்துக்கொள்ளவே விரும்புகிறோம்" என்று கெனடி கூறினார். லாவோஸில் நடைபெறும் தாக்குதல் நிற்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

லாவோஸில் மீண்டும் அமைதி ஏற்பட்டு அது நடுநிலைமை நாடாக விளங்க வேண்டுமென்று கெனடி விருப்பம் தெரிவித்தார்.

#### லாவோஸ்பற்றி பிரிட்டிஷ் திட்டம்

லாவோஸ் நெருக்கடிகளை தீர்த்துவைப்பதற்கான மூன்று அம்சங்கள் அடங்கிய திட்டமொன்றை பிரிட்டன் ரஷ்யாவுக்கு தெரிவித்திருக்கிறது. ரஷ்யாவிலுள்ள பிரிட்டிஷ் தூதர் மூலமாக இத்திட்டம் ரஷ்ய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

லாவோஸில் வேலைநிறுத்தம் ஏற்படுவதற்கு பிரிட்டனும், ரஷ்யாவும் முயற்சி செய்ய வேண்டும் என்றும், லாவோஸ் நிலைமை குறித்து ஆலோசிக்க பல நாடுகளைக் கொண்ட மகாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென்றும் பிரிட்டன் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்க அரசாங்கத்துடன் ஆலோசனைகள் நடத்திய பின்னரே பிரிட்டன் இந்தத் திட்டத்தைத் தயாரித்ததாகவும், இத்திட்டம்பற்றி காமன்வெல்த் நாடுகளுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

#### லாவோஸுக்கு அமெரிக்க துருப்பு

லாவோஸில் வெளியார் தலையீட்டைத்தடுக்க லாவோஸின் கிழக்குகோடிப்பிரதேசத்துக்கு அமெரிக்கா துருப்புகள் அனுப்புவதாக செய்திகள் கிடைத்துள்ளன. ஆனல் ஊர்ஜிதமாகவில்லை.

லாவோஸுக்கு அமெரிக்கா துருப்பு அனுப்புவதாக சீனப் பத்திரிகைகள் கண்டித்திருக்கின்றன. ஆனல் அமெரிக்கா சீன செய்திகளை மறுக்கவுமில்லை, ஒப்புக்கொள்ளவுமில்லை.

### பல இடங்களில் அனுதாபம்

வாழைச்சேனை மக்கள் புதன் கிழமை காலை திரு. ஏகாம்பரத்தின் உருவப்படத்துடன் மௌன ஊர்வலம் நடாத்தினர்கள். அங்குள்ள கடைகள், வீடுகள் எல்லாவற்றிலும் கறுத்தக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

* * *

கல்லடி உப்போடை பேச்சி அம்மன் ஆலயத்தில் திரு. ஏகாம்பரத்தின் ஆன்மா சாந்தியடைய 2நிமிஷ மௌனத்துடன் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது.

* * *

மட்டக்களப்பு மக்கள் இரங்கற் பாக்களைப் பாடிக்கொண்டு பிரதானவீதி வழியே ஊர்வலம் சென்றார்கள். அங்கு கடைகள் யாவும் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

* * *

கொடிகாம மக்கள் வியாபாரம் செய்வதின்றி கடைகள் யாவும்மூடி கறுத்தக் கொடிகள் பறக்கவிட்டிருந்தார்கள்.

* * *

முல்லைத்தீவில் உள்ள கடைகளிலும், வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

## 'பாரதநாட்டின் மதிப்புமேலும் உயர்ந்துள்ளது'

### காங்கோவுக்கு படை அனுப்பியதுகுறித்து ஸ்ரீ நேரு கருத்து

புதுடில்லி, மார்ச் 24

ஐ. நா. வின் சமாதான நடவடிக்கைகளுக்கு வலுவூட்டும் நோக்கத்துடன்தான் பாரதம் காங்கோவுக்கு படைகள் அனுப்ப இணங்கியது என்றும், காங்கோவுக்கு பாரதம் துருப்புகள் அனுப்ப இணங்கியதின் காரணமாக உலக அரங்கில் அதன் செல்வாக்கும் மதிப்பும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது என்றும் பிரதம மந்திரி திரு. நேரு நேற்றுக் கூறினர்.

காங்கிரஸ் பார்லிமெண்ட் உறுப்பினர்கள் கூட்டத்தில் நேற்று நேரு பேசியபோது இந்தத் தகவலை வெளியிட்டார்.

தென்னபிரிக்கா காமன்வெல்த்திலிருந்து விலகிக் கொண்டது குறித்து பிரதமர் நேரு குறிப்பிட்டு பேசுகையில் கூறினர். தனது பிரஜைகளுக்கு சமஉரிமை கொடுக்க மறுக்கிறது, காமன் வெல்த் நாடுகளின் பொதுவான அபிப்பிராயத்தையும் அது ஏற்கவில்லை", என்றார்.

காங்கோவுக்கு துருப்புகள் அனுப்பியதுபற்றி அவர் பேசுகையில், ஐ. நா. வின் சமாதான நடவடிக்கைகள் காங்கோவில் வெற்றியளிக்க வேண்டுமென்றும், இல்லையென்றல் உலகத்தின் பெரும் பூசல் பிரதேசமாக காங்கோ இருந்து வரும் என்றும் குறிப்பிட்டார். கட்டாங்கா தலைவர் ஷாம்பேயும், காங்கோ ராணுவத் தளபதி மொபுட்டுவும் பாரதம் காங்கோவுக்குத் துருப்புகள் அனுப்புவதை எதிர்க்கிறர்கள் என்று பிரதமருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

"அவர்கள் முன்னரும் அப்படித்தான் செய்துவந்தார்கள், இனிமேலும் அப்படித்தான் செய்வார்கள்" என்றார். காங்கோவில் மீண்டும் அமைதி ஏற்படுவதற்கு பெல்ஜியம் முற்ருக அங்கிருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்று நேரு குறிப்பிட்டார்,

#### மேனன் கருத்து

பாரத பாதுகாப்பு மந்திரி திரு. கிஷ்ணமேனன் நேற்று பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, காங்கோவிலிருந்து, பெல்ஜியத்தை வெளியேற்றி சட்டபூர்வமான பார்லிமெண்டை கூட்டவேண்டும் என்றார்.

காங்கோவில் அமைதியை நிலைநாட்ட ஐ. நா. மேற்கொளும் நடவடிக்கைகளுக்கு ஆக்கமளிப்பதற்காகவே அங்கு துருப்புகள் அனுப்ப பாரதம் முன் வந்தது என்றும் திரு. மேனன் மீண்டும் வற்புறுத்தினர்.

### ஹரிமன் - நேரு சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 23

அமெரிக்க வெளிநாட்டுத் தூதுவர் திரு. ஹரிமன் இன்று பாரதப் பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசுகையில் காங்கோவுக்கு இந்தியா துருப்புகள் அனுப்பியது பற்றித் தாம் பாராட்டுவதாகக் கூறினர்.

திரு. நேரு தாம் கெனடியைச் சந்திக்க விரும்புவதாகவும் இப்போது அதற்குத் தகுந்த வாய்ப்பு இல்லை என்றும் தெரிவித்து அமெரிக்காவுக்கும் பாரதத்துக்கும் இப்பொழுது நெருக்கிய உறவு ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதென வும் கூறினர்.

### 'நெருக்கடிகளைப் போக்க வழிசெய்க'

சாவகச்சேரி, வியாழன்

மொழிப்பிரச்னையால் உருவாகியுள்ள நெருக்கடியைப் போக்குவதற்கு, தமிழ்த் தலைவர்களும், பிரமுகர்களும் அவசியமான வழிவகைகளைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று பூநகரி கிராமச்சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதைக் கூட்டம் கண்டித்ததுடன் அதுபற்றி பார்லிமெண்டில் ஆராய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ராணுவத்தை உடன் வாபஸ் பெறவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

### ஆடம்பரமற்ற திருவிழா

சுழிபுரம் வியாழன்

பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் புதன் கிழமை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது. இம்முறை விழாக்களுக்கு அதிக செலவு செய்யாமல் அமைதியான முறையில் பூசையை செய்து சுவாமியை எழுந்தருளச் செய்வது என கோவில் பரிபாலன சபையார் அறிவித்துள்ளனர்.


**நீரழிவு வியாதிக்கு**

**புத்தம் புதிய மருந்து**

ஜெர்மன் ஆராய்ச்சி நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட

**"டயமெலன்"**

**(DIA MELLON)**

வியாதியஸ்தர்களுக்கு இலவச ஆலோசனையும் அளிக்கப்படும்.

25 வில்லைகள் கொண்ட போத்தல் ஒன்றுக்கு ரூ. 6-50

இலங்கை விநியோகஸ்தர்கள்:

போன்: 4805

**நியூ கொழும்பு மெடிக்கல் ஸ்டோர்ஸ்**

82, மெயின் வீதி, கொழும்பு.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. இவை பற்றிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

Advt. 58


# சத்தியாக்கிரக செய்திகள்

மன்னார், மார்ச்சு 23

எவ்வித அசம்பாவிதமுமின்றி இங்கு சத்தியாக்கிரகம் மிக அமைதியாக நடைபெற்று வருகின்றது. 500 ஆண்களும் 200 பெண்களும் இன்று நடைபெற்ற சத்தியாக்கிரகத்திற் கலந்துகொண்டனர். 'திருக்கேதீச்சர அம்மா' என்றழைக்கப்படும் அடியார் ஒருவர் சடைமுடியுடன் உண்ணாவிரதமிருந்து சத்தியாக்கிரகம்செய்யும காட்சி மிக உருக்கமாக இருக்கின்றது. மன்னார் எம்.பி. திரு அழககோனிடம் திரு. எஸ். அல்பேர்ட் பணமுடிப்பு ஒன்றை அளித்தார்.

முருங்கனிலிருந்தும் அடம்பனிலிருந்தும் ஊர்வலங்கள் இன்று மாலை வந்தடைந்தன. உணவு வசதிகள் நன்கு கவனிக்கப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாண நகர உதவி மேயர் திரு. நா. த. செல்வத்துரையின் தலைமையில் 14-ம் வட்டார மக்களும் திரு. பி. எஸ். சோமசுந்தரம் தலைமையில் 15-ம் வட்டார மக்களும் மௌன ஊர்வலமாக வியாழக்கிழமை மாலையில் கச்சேரிக்கு வந்து சேர்ந்து மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

நாச்சிமார் கோயிலடியிலிருந்து விஸ்வகர்மாக்களின் ஊர்வலமொன்றும் காலையில் கச்சேரிக்கு வந்து சேர்ந்தனர்.

ஃ ஃ ஃ

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து புதன்கிழமை இரவு எட்டு மணிக்கு ஊர்வலமொன்று புறப்பட்டு அன்று இரவு பத்து மணிக்கு கச்சேரியை சென்றடைந்தது.

மூதூர் எம். பி. ஏகாம்பரம் மரணம் குறித்து ஊர்வலத்தினர் இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டித்தனர்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவரும், முஸ்லிம் வாலிபர் சங்கத் தலைவரும் வர்த்தக தமிழ் இயக்கத்தின் துணைத் தலைவருமான அல்ஹாஜ் வி. எம். எம். அபூசாலிஹ் மூதூர் முதல் எம். பி. திரு. ஏகாம்பரம் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும செய்தியொன்றை விடுத்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

நோர்வூட் கடைவீதி தமிழ், முஸ்லிம் மக்கள் சத்தியாகிரக இயக்கத்துக்குப பணமுடிப்பொன்றை வழங்கியுள்ளனர்.

ஃ ஃ ஃ

புதன்கிழமை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தாவூர், பாலமுனை, ஆகிய முஸ்லிம் கிராமங்களிலிருந்தும் காரைதீவு, அட்டப்பளம் கோளாவில் ஆகிய தமிழ்க் கிராமங்களிலிருந்தும் மூவாயிரம் சத்தியாக்கிரகிகள் வான்களிலும், லொறிகளிலுமாக மட்டுநகர் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

ஃ ஃ ஃ

மட்டக்களப்பு சத்தியாக்கிரகம் பக்தி நிறைந்துள்ளதாகக் காணப்படுகிறது. இரட்சணிய சேனை, மாதர் சங்கம், சைவ மகாசபையினர் ஆகியோர் திறம்பட நடாத்தி வருகின்றனர்.

## உருக்கமான மறியல் செய்திகள்

—வாழைச்சேனை, வெள்ளி நாற்புறமும் ஆற்றால் சூழப்பட்டதும் வாகனப் போக்குவரத்துக்கு வசதியற்றதுமான "நாசிவன் தீவிலிருந்து சுமார் இருபத்தைந்து பெண்மணிகள் தோணிகள் மூலம் ஆற்றைக் கடந்து வாழைச்சேனையை அடைந்து பின் அங்கிருந்து ட்ராக்டர் மூலம் மட்டக்களப்புக்கு சென்று மறியல் நடத்தினர்.

ஃ ஃ ஃ

கல்குடாத் தொகுதிச் சத்தியாக்கிரகத்தின்போது வெயில் அகோரத்தினல் தங்கள் கைக் குழந்தைகள் துடித்துக் கத்திய போதும் இருந்த இடம்விட்டு நகராத மக்களைக்கண்டு ஒரு பொலிஸ் அதிகாரிகூட கண்ணீர் விட்டார்.

ஃ ஃ ஃ

மண்டுரைச் சேர்ந்த ப. சி. கந்தையா என்னும் வயோதிபர் புதன்கிழமை பட்டிருப்பு எம். பி. யான திரு. எஸ். எம். இராசமாணிக்கத்திடம் சத்தியாக்கிரக நிதிக்கு 5 ரூபா கொடுத்து "இந்த ஏழை செய்யக்கூடிய உதவி இதுதான்" என்று கூறினர். இதற்கு திரு இராசமாணிக்கம் "நீங்கள் கொடுத்த தொகை சிறிதாக இருந்தாலும், இந்தத் தொகையையே நான் அளவிட முடியாத பெரிய தொகையாக கருதுகிறேன்" என்று ஆனந்தக்கண்ணீருடன் கூறினர்.

* * *

சித்தாண்டியைச் சேர்ந்த மூத்தார் செல்லம்மா என்னும் வாதநோயால் பீடிக்கப்பட்ட மாது சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டதால் தன்னுடைய வாத நோய் தீர்ந்தது என்று திரு. பொ. மாணிக்கவாசகத்திடம்தெரிவித்ததோடு ஒவ்வொருநாளும் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு வருகிறார். இம்மாது சனிக்கிழமை உபவாசம் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

## சாவகச்சேரியில் அனுதாபம்

சாவகச்சேரி, வியாழன்

மூதூர் முதல் எம். பி. திரு. ரி. ஏகாமபரம் மரணம் குறித்து சாவகச்சேரியில் அனுதாபம் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டதுடன் கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டன.

## பாடசாலை ஸ்தாபகர் நினைவு தினம்

பருத்தித்துறை,வியாழன்

அல்வாய் தெற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதன் ஸ்தாபகரும் முன்னைள் முகாமையாளருமாகிய காலஞ்சென்ற பண்டிதமணி. க. சின்னத்தம்பி அவர்களது வேது வருட நினைவு விழா கொண்டாடப்பட்டது.

உடுப்பிட்டித் தொகுதி எம். பி திரு. மு. சிவசிதம்பரம் விழாவுக்குத் தலைமை வகித்தார்.



# பங்கீட்டரிசிக்கு கொழும்பிலிருந்து உத்தரவுச்சீட்டு வழங்க கோரிக்கை

## உணவுக் கமிஷனருடன் சமாஜக் காரியதரிசி பேட்டி

யாழ்ப்பாணம், சனி

அரிசிப் பங்கீடு சம்பந்தமாக வலிகாமம் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜக் காரியதரிசி திரு. கே. இராமச்சந்திரன், புதன்கிழமையன்று உணவுக் கமிஷனரைக் கொழும்பில் பேட்டி கண்டு பேசினர்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் இப்போது நிலவும் சூழ்நிலையை அவர் உணவுக் கமிஷனருக்கு விளக்கிக் கூறியதுடன், அரிசிப் பங்கீட்டுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமலிருப்பதின் காரணத்தையும் அவர் விளங்கப்படுத்தினர். யூனியன்கள் சமர்ப்பிக்கும் செக்குகளைப் பெற்றுக்கொண்டு கொழும்பிலிருந்தே உத்தரவு சீட்டு அளிக்குமாறு அவர் உணவுக் கமிஷனரைக் கேட்டுக் கொண்டார். உணவுக் கமிஷனர் ஆலோசனை செய்த பின் வெள்ளிக்கிழமை வரை பொறுத்திருக்கும்படி சமாஜக் காரியதரிசியைக் கேட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு தந்தி மூலம் பதில் அளிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

### அரிசிப் பங்கீட்டுக்கு யூனியன்கள் யோசனை

அரிசிப் பங்கீட்டு விஷயத்தில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைப் போக்குவதற்கு சில கூட்டுறவு யூனியன்கள் யாழ்ப்பாணம் உதவி உணவுக் கமிஷனருக்கும், கொழும்பிலுள்ள உணவுக் கமிஷனருக்கும் பின்வரும் யோசனைகளை அனுப்பி வைத்துள்ளன.

1. பங்கீட்டரிசிக்கான உத்தரவுச் சீட்டுகளை உதவி உணவுக் கமிஷனர், விநியோக நிலையத்திலிருந்து வழங்கலாம்.

2. விநியோக நிலையத்திலேயே கூப்பன்களும், செக்குகளும் பெற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு சமயத்தில் யூனியன்களின் பிரதிநிதிகள் அங்கு வந்து இவற்றைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செயயலாம்.

3. உத்தரவாத செக்குகள், கூப்பன்களின் எண்ணிக்கை சம்பந்தமான சத்தியக் கடதாசிகள், ஆகியவற்றைப் பதிவுத் தபாலில் அனுப்பவும் உத்தரவுச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளவும் அனுமதிக்க வேண்டும்.

4. செக்குகள், சத்தியக் கடதாசிகள் ஆகியவை சமர்ப்பிக்கப்பட்டதும், உத்தரவுச் சீட்டுகள் கொழும்பிலிருந்து கிடைக்க ஏற்பாடு செய்யும்படி கொழும்பிலுள்ள உணவுக் கமிஷன் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

இலட்சுமி தோட்டத் தகராறு

# பொது வேலை நிறுத்தம் செய்யக் கோரிக்கை

நாவலப்பிட்டி மார்ச் 23

சமீபத்தில் நாவலப்பட்டியைச் சேர்ந்த இலட்சுமி தோட்டத்தில் நடைபெற்ற கைகலப்பின் காரணமாக ஜில்லாத் தலைவர்களின் அவசர மகாநாடொன்று திரு. கே. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

இத்தோட்டப் பிரச்சினைக்கு இறுதி முடிவு காணும்வரையில் இலங்கை பூராவும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும் இ. தொ. காங்கிரஸ் மத்தியக் கமிட்டி இதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

திரு. கே. சுப்பையா இக் கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:-

இலட்சுமி தோட்டப் பிரச்சினைக்கு மட்டுமன்றி தமிழ் மொழி உரிமைக்காகவும் நாம் அனைவரும் போராட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். மொழிப் பிரச்சினை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் உரியதல்ல, பிறப்புப் பத்திரம், விவாகப் பதிவுப் பத்திரம் என்பன மலைநாட்டு மக்களுக்கும் தமிழில் கிடைக்க வேண்டும். இப்பொழுதே இந்த உரிமையைப் பெருவிட்டால் எதிர்காலச் சந்ததியின் நிலைமைதான் என்ன? வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நமது சகோதரர்கள் படும் கஷ்டங்களைப் பார்த்துக் கொண்டு நாமும் வாளாவிருப்பதா? இதற்கு நம்மைத் தகுதி செய்து கொண்டோமா என்பதே இப்போதைய கேள்வி.

# சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெறும்

## வவுனியா எம். பி. அறிவிப்பு

வவனியா, வெள்ளி

இன்று வவனியாவில் எதிர்பாராத அளவு மக்கள் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், திருமதி சிவசிதம்பரம், உடுவில் எம். பி; திரு. வி. தர்மலிங்கம், பட்டினசபைத் தலைவர் திரு. சுப்பிரமணியம், இ. தொ. கா.வின் உள்ளூர்த் தலைவர் திரு. நடேசபிள்ளை ஆகியோர் இன்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினர்கள். இன்று நடைபெற்ற ஊர்வலத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்துக்கு. உடுவில் எம். பி.யும், வவனியா பட்டின சபைத் தலைவரும் தலைமை தாங்கினர். ஏராளமான பெண் தொண்டர்களும் இதிற் கலந்து கொண்டனர்.

சத்தியாக்கிரகம் அமைதியான சூழ்நிலையில் நடைபெற்றது. சத்தியாக்கிரகிகள் பிரார்த்தனைக் கீதங்கள் பாடிக் கொண்டிருந்தனர். சத்தியாக்கிரகிகளில் ஒரு சாரார் மஞ்சள் பட்டிகளும், ஒரு சாரார் ரோஸ் நிறப் பட்டிகளும் அணிந்திருந்தனர்.

### தொடர்ந்து நடைபெறும்

வவனியாவில் சத்தியாக்கிரக இயக்கம் தொடர்ந்து நடைபெறும் என்று வவனியா எம். பி. 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார். முல்லைத்தீவுப் பட்டின சங்கத் தலைவரும், வவனியா தொகுதியிலுள்ள 15 கிராமச் சங்கங்களின் தலைவர்களும் இந்த முடிவைச் செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

வவனியாப் பகுதியிலுள்ள 56 பலநோக்குச் சங்கங்களும் தங்களுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியைச் சத்தியாக்கிரக நிதிக்கு வழங்க முன்வந்திருப்பதாகவும் திரு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

யாழ்பபாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா இன்று பிற்பகல் சத்தியாக்கிரகிகள் மத்தியில் பிரசன்னமாய் இருந்தார். வவனியா எம். பி. உடுவில் எம். பி. ஆகியோரும் அவருடன் இருந்தனர்.

---

### திரு. ஏகாம்பரம் பிரிவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

மூதூர் எம். பி. திரு. ஏகாம்பரம் காலமானது குறித்து அனுதாபம் தெரிவித்து ஒரு தந்திச் செய்தியை திருமதி ஏகாம்பரத்துக்கு இன்று யாழ்ப்பாணம் வர்த்தகர் தமிழ் இயக்கம் அனுப்பிவைத்தது.

---

மட்டக்களப்பு, சனி

தமிழர்புர திராவிட இளைஞர் முன்னேற்றக் கழக அங்கத்தினர் சுமார் இருபத்தைந்து பேர் வியாழனன்று தங்கள் வாய்களையும் கைகளையும் கறுப்புத் துணியால் சுற்றிக் கொண்டும், தங்கள் உடம்பை முட்கம்பிகளால் வரிந்து கொண்டும் மட்டக்களப்பை வந்தடைந்தனர்.

ஃ ஃ ஃ

தனியூற்று, சனி

தனியூற்று வர்த்தகர் சங்கத்தினர் 1000 ரூபாய் பணமுடிப்பை வவனியா எம், பி. திரு. சிவசிதம்பரத்திடம் வழங்கியுள்ளனர்.


திரும்பவும் மகிழ்விக்க
மார்ச் 24ந் திகதி வெள்ளி முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனல் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.
ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.
........எனவே
பழகப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் தடும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.........
ஆனல் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் போராடினேன்......
ஏன்?
எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?
பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......
புதுமைவிரும்பிகள்
எம். ஜீ. ராமச்சந்திரன்
பீ. வீ. நரசிம்மபாரதீ,
பீ. எஸ்: கோவிந்தன்
ஈ. வீ. சரோஜா
மாதுரீதேவீ, வீ. சுசீலா
நடித்த



அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை
டைரக்‌ஷன்: CH. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
கதை, வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டுடியோ. நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, மதருஸ்.4.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோகரா (யாழ்ப்பாணம்)
சியாமளா
தியாகராஜ பாகவதர்
எஸ். வரலக்ஷ்மி
நடித்தது.
மாலை 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30 மெற்னி

# ஆசிரியர்களுக்கு ரூபா 20 சம்பள உயர்வு

## சம்பளக் கமிஷன் அறிக்கை

கொழும்பு, மார்ச் 24

திரு. வில்மட் பெரோரா வைத் தலைவராகக் கொண்ட சம்பள நிர்ணயக் கமிஷன் நேற்று கவனர் ஜெனரலிடம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் மிகக் குறைந்த சம்பளம் 135 ரூபாயாக இருக்கவேண்டுமென்றும் மிக அதிக தொகை 2,000 ரூபாவாக இருக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது.

கவர்னர் ஜெனரலின் சம்பளம் மாதமொன்றுக்கு 9,000 ரூபாவிலிருந்து 5,000 ரூபாயாக (எல்லாம் உட்பட) குறைக்கலாமென்றும் அறிக்கை கூறுகிறது.

நிரந்தரக் காரியதரிசிகளின் சம்பளமும் மற்றும் உயர்தர அரசாங்க சேவை உத்தியோகஸ்தர்களின் சம்பளமும் 2,750 ரூபாயிலிருந்து 2,250 ஆகக் குறைக்கலாமென்றும் அறிக்கைமேலும் கூறுகிறது.

இவற்றை 1960-ம் வருடம் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல் நடத்தலாம்.

இக் கமிஷனில் கையொப்பமிடாத கமிஷனர்களில் ஒருவரான திரு. என். எம். பெரேரா குறைந்த சம்பளம் 160 ரூபாயாகவும் கூடிய தொகை 1,800 ரூபாயாகவும் இருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளார்.

புதிதாக உத்தியோகத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் குறைந்த தர இடங்களுக்குத்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும் உயர்ந்த உத்தியோகங்களுக்கு பதவியிலிருந்து உயர்ந்தவர்களையே நிரப்ப வேண்டுமென்றும் கமிஷன் கூறுகிறது.

இவ்வித சம்பள உயர்வு கொடுப்பதனால் அரசாங்கத்துக்கு4 லிருந்து நாலரைக் கோடி ரூபாய் வரை மேலதிகமாகச் செலவாகுமென அறிக்கையில் மதிப்பிடப்பட்டிருக்கிறது

### ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பல விதங்களிலும் அண்மையிலுள்ள இந்தியா முன்னேறிச் செல்லுகையில், இலங்கையில் முன்னேற்றமில்லையே என்று பிரதமர் சிறியா வாய்விட்டுப் பல தடவை சொல்லியுள்ளார்.

நேற்றுத் தபாலில், "முன்னேறிச் செல்லுகிறது" (போர்ஜிங் அஹெட்) என்ற தலைப்புடன் ஓர் அழகான பிரசாரப் புத்தகம் அமெரிக்க ஸ்தானிகராலயத்திலிருந்து கிடைத்தது. விவசாயம், கைத்தொழில், சுகாதாரம், ரயில்வே, விமானம் முதலிய பல துறைகளிலும் அமெரிக்க உதவியுடன் இலங்கை எப்படி முன்னேறி வருகிறதென்பதைப் பலபடங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். இதைப்பார்ப்பவர்களுக்கு, இலங்கை பல பலதுறைகளிலும் முன்னேறி வருகிறதென்றே தோன்றும்படி உள்ளது! வெற்றிகரமான பிரசாரம்தான்.

இதில் என் மனதைப் பெரிதும் கவர்ந்தது, இரு தமிழ்ப் பெண்மணிகள், தேயிலைத் தோட்டத்திலே இரு கைகளாலும் கொழுந்து பறிக்கும் வர்ணப்படம்தான்.

வெகுதூரத்திலுள்ள அமெரிக்கா முதலிய நாட்டவர்க்கும் உற்சாக மூட்டும் பானத்தை அளிக்கப்பாடுபடும் இத் தமிழ்ப் பெண்மணிகளின் நிலை இன்று மலைநாட்டில் எப்படி இருக்கிறது? என்பதையும் அவர்களது எதிர்காலம் பற்றியும் என் மனம் ஏதேதோ எண்ணியது.

இந்தப் பிரசுரம் தமிழிலும் சிங்களத்திலும் வெளியாகிறதாம். இந்தப் பிரசுரத்தையும், சிறப்பாக, தேயிலைத்தோட்டத்தில் கொழுந்தெடுக்கும் தமிழ்ப் பெண்களின் படத்தையும் கவனித்துப்பார்க்கும்படி பிரதமர் சிறிமாவுக்கு சிபார்சு செய்கிறேன்.

# மொழிப்பிரச்னைக்கு புதிய முறையில் தீர்வு

கொழும்பு, வியாழன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த ஒரு மாதகாலமாக நடந்து வரும் மறியல் இயக்கத்துக்கு சுமுகமான முடிவு காணும் புதுமுயற்சிகள் நடப்பதாகக் கூறப்படுகிறது.

நிலைமை மேலும் மோசமாகாமலிருக்க அரசாங்கக்கட்சி மட்டுமன்றி தமிழ்த் தலைவர்களிடையிலும் கவலை இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால், சமரசம் எந்தமுறையில் இருக்கலாமென்பது தெரியவில்லை.

காலம் சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சமரச பேச்சுக்கள் இருக்குமென சமீபகாலம்வரை கருதப்பட்டு வந்தது. சிங்களம் ஆட்சிமொழி என்ற முறையில் தேசிய சிறுபான்மையினரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்தது. ஆனால் நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சமீபத்தில் கூறியவற்றையும், லண்டனில் திருமதி பண்டாரநாயக்கா கூறியதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி ஒன்றையும் பார்க்கும்போது இப்பிரச்சினையை புதிய கோணத்திலேயே அணுகவேண்டியிருக்குமெனத் தோன்றுகிறது.

எதிர்காலத்தில் தேசம் முழுவதிலும் ஒரே மொழி (சிங்களம்) ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதும், சிங்களம் தெரியாத இன்றைய தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் அரசாங்கத்தின் கொள்கை என்ற முறையில் இவர்களது கருத்துக்கள் இருக்கின்றன.

எனவே, தமிழுக்கு "விசேஷ உபயோகம்" என்பது இடைக்கால ஏற்பாடுதானோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இப்பிரச்சினை குறித்து மந்திரிசபையிலும் அரசாங்கக் கட்சியிலும் தீவிர கருத்து வேற்றுமை நிலவுவதாகத் தெரிகிறது.

### இரத்தினக் கம்பளம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் அதனை மக்கள் வரவேற்பார்கள் எனலாம்.

### டட்லி ஜனநாயகம்

பிரம்மச்சாரிப் பிரதமர் என்ற புகழுக்கு ஆளாகிய திரு. டட்லி சேனநாயக்கா, ஜனநாயகம்பற்றிச் சமீபத்தில் தெரிவித்துள்ள விளக்கம் பத்திரிகைகளில் மணம் வீசச் செய்கின்றது. சமயசார்புடைய ஒரு சமூகத்தில்தான் ஜனநாயகம் மணம் கமழும் என டட்லி சமீபத்திற் கூறியிருப்பதையே இங்கு குறிப்பிடுகிறேன். ஜனநாயகம் சமய வாழ்வுடன் இணைந்து செல்வதொன்றானல், சிலநாடுகளில் ஜனநாயகம் என்ற போர்வையில் நடைபெறும் அக்கிரமங்களை என்ன பெயர்சொல்லி அழைப்பதோ தெரியவில்லை.

## மன்னாரில் மறியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி அந்த அறிக்கை கூறுவதாவது:-

யாழ்ப்பாணத்தில் நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை. கச்சேரி வாசல்களில் மறியல் நடைபெறுகிறது. இதர அரசாங்கக் காரியாலயங்களின் முன் ஒரு சிலரே மறியல் செய்கின்றனர். யாழ்ப்பாணம் கச்சேரியைச் சேர்ந்த ஊழியர்கள் எவரும் வேலைக்குத் திரும்பவில்லை.

மன்னாரில் மறியல் இயக்கத்தை சமஷ்டிக் கட்சிவலைப் படுத்துவது போல் தோன்றுகிறது. மறியலில் அதிகமான பெண்கள் கலந்துகொண்டனர். மூன்று ஊர்வலங்கள் நடைபெற்றன.

திருக்கோணமலையில் கச்சேரி வாசல்களில் சுமார் 300 பேர் மறியல் செய்கின்றனர். இதர காரியாலங்களில் மறியல் நடைபெறவில்லை. திருக்கோணமலையில் மறியல் நடைபெறும் இடத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் காணப்பட்டார்.

மட்டக்களப்பில் மறியலில் கலந்து கொள்வோர் தொகை குறைவாகக் காணப்பட்டது. உணர்ச்சி வேகமும் குறைந்துள்ளது. கச்சேரி வாசல்களில் மிகக்குறைவான தொகையினரே மறியல் செய்கின்றனர். இதர காரியாலயங்களில் இரண்டொருவரும் சில காரியாலங்களின் வாசல்களில் மூன்று பேருமே மறியல் செய்யக் காணப்பட்டனர்.

வவனியாவில் மாற்றம் எதுவுமில்லை.

திருக்மோணமலை, மன்னர், மட்டக்களப்பு, வவனியாக் கச்சேரிகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் வேலைக்கு வந்திருந்திருந்தனர்.

## சத்தியாக்கிரகநிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணங்களில் இராணுவம், கடற்படை ஆகியவற்றின் நடவடிக்கை பற்றி திரு. ஸி. பி. டி' சில்வா பிரதம மந்திரிக்கு விளக்கிக் கூறினர்.

இன்றைய மகாநாட்டில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிறந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸ் சமுகமளித்திருந்தார்.

---

70,000 ஆசிரியர்களுக்கு ஒவ்வொருவருக்கும் மாதம் சுமார் 20 ரூபாய் வீதம் சம்பளம் அதிகரிக்கலாம்.

## சிப்பந்திகளுக்கு அரிசி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர்களும் இதர பொதுமக்களுக்குப் பங்கீட்டரிசி கிடைக்காமலிருக்கும்பொழுது தங்களுக்கு மட்டும் விசேஷ சலுகை தேவையில்லையென்று தெரிவித்தனர்.

அரசாங்க அதிபரின் உத்தரவின்மீது விற்பனை இலாகாவைச் சேர்ந்த மோட்டார் வான்கள், விநியோக நிலயத்திலிருந்து நேற்று அரிசி ஏற்றிக்கொண்டு அரசாங்கக்காரியாலயங்கள் சிலவற்றுக்குச் சென்றன. அரசாங்க இலாகாக்களுக்கான பங்கீட்டரிசிக்குரிய அனுமதிச் சீட்டுக்கள் தபால்மூலம் அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

### வியாபாரிகளிடம் முயற்சி

யாழ்ப்பாணத்திலுள்ள வியாபாரிகள் சிலரிடம் உத்தியோகத்தர் சிலர் நேற்றுச் சென்று "உங்கள் டைகளுக்கே பங்கீட்டரிசியைக் கொண்டுவந்து கொடுத்து மக்களுக்கு விநியோகிக்க அரசாங்க அதிபர் விரும்புகிறார்" என்று தெரிவித்தனராம். அதற்கான பணத்தை அவர்கள் வங்கியில் கட்டலாமென்றும், பங்கீட்டரிசி வழங்கியதற்குரிய கூப்பன் துண்டுகளைப் பொறுத்து, பின்னர் பங்கீட்டரிசி விநியோகிக்கப்படும் என்றும் அந்த உத்தியோகத்தர்கள் கூறினர்.

"உங்கள் கடைகளுக்குமுன் மறியல் நடைபெற்றால் நீங்கள் உங்கள் உறவினருடைய கடைப் பெயர்களைக் கொடுங்கள். அந்தக் கடைகளுக்குப் பங்கீட்டரிசி வழங்குவதற்கான உத்தரவாதம் அளிக்கப்படும்" என்று அந்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். ஆனல் வர்த்தகர்கள் மறுத்துவிட்டனர்.

இவ்விபரத்தை சில வியாபாரிகள் நேற்று 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தனர்.

## தமிழரசுக்கட்சியே பொறுப்பாகும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம், மக்களிடையே அதிருப்தியைத் தூண்டி குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாகத்தைச் சீர்குலைத்து அங்கு தனி அரசை நிறுவும் கொள்கை தெளிவாகப் புலப்படுகிறது.

### உணவு நிலைக்கு அவர்களே பொறுப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டாமல் சமாளிப்பதற்கு அரசாங்கம் தன்னாலானதைச் செய்து வருகின்றது.

இப்பகுதிகளில் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கும் சத்தியாக்கிரகிகளே பொறுப்பாவர்.

## மாஸ்கோவில் நிதிமந்திரி

மாஸ்கோ,மார்ச் 24

இலங்கை நிதிமந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பொருளாதார உதவித் திட்டம்பற்றி இன்று தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஸ்டேஷனடியைச் சேர்ந்த திரு. இளையதம்பி அவர்களின் பாரியாரும், திருவாளர்கள் பொன்னம்பலம், நாகலிங்கம், சின்னத்துரை (ஆசிரியர், கொட்டடி நமசிவாய வித்தியாசாலை), திருமதிகள் கந்தையா, வேலுப்பிள்ளை, சண்முகம் ஆகியோரின் தாயாருமாகிய திருமதி சின்னத்தங்கச்சி இளையதம்பி அவர்கள் நேற்று 24 - 3 - 61 வெள்ளிக்கிழமை இரவு 9மணிக்கு காலமானர். அன்னரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணியளவில் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**NATIONAL EDUCATION**

Its Concept and Content

by

**N. SABARATNAM** (B. A. Lond.)

Asst. Master, Karainagar Hindu College.

Price Rs. 1/75

—Publishers:—

S. S. Sanmuganathan & Sons

JAFFNA.

Advt. 66

# ஹான்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

7, செட்டியார் தெரு, கொழும்பு 11.

## புதுவருடக் கொண்டாட்டத்துக்கு

புதுரக ஆடையணிகளோ,
ஜோடனைத் துணிமணிகளோ
உங்களுக்குத் தேவையா?

பல்வேறு ரகங்களில் எம்மிடமுள்ள அற்புதமான சேலைகள், ஷேர்ட் துணிகள், சாரங்கள், வேட்டிகள், கம்பளங்கள் திரைச்சேலைகள், வீட்டுப்பாவனைத் துணிமணிகள், ஆடையணிகளுக்கான ஐவுளி ரகங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, உங்களுக்குத் தேவைப்படுவதைத் தெரிந்தெடுங்கள்.

**மிகக்குறைந்த விலையில் மிகச்சிறந்த பொருட்கள்**

மேற் குறித்த ரகத் துணிமணிகள் யாவும், யாழ்ப்பாணம், மெயின் வீதி, அன்னை கட்டிடத்திலுள்ள ஹான்ட்லூம்ஸ் கிளையிலும் கிடைக்கும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.